சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

முன்னிலை: **திரு.M.மணிகண்டன், M.A., M.L., PG.D., C.F.Sc.,**

சார்பு நீதிபதி பொள்ளாச்சி

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள் புதன்கிழமை
(2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் சித்திரை திங்கள் 16 ம் நாள்)

**மேல்முறையீட்டு அசல் வழக்கு எண். 12/2025**

**CNR No.TNCB11-000384-2025**

ராஜம்மாள், க/பெ. சண்முகவேல், வயது 62, வசிப்பிட முகவரி கம்பாலபட்டி கிராமம், ஆனைமலை தாலூக்கா, பொள்ளாச்சி.

... மேல்முறையீட்டாளர் / 1 ம் பிரதிவாதி

/ எதிர் /

1. சண்முகவேல், த/பெ. நாச்சிமுத்து கவுண்டர், வயது 83, வசிப்பிட முகவரி கம்பாலபட்டி கிராமம், ஆனைமலை தாலூக்கா, பொள்ளாச்சி.

... 1 ம் எதிர்மனுதாரர் / வாதி

2. நடராஜ், த/பெ. நாச்சிமுத்து கவுண்டர், வயது 65, வசிப்பிட முகவரி கம்பாலபட்டி கிராமம், ஆனைமலை தாலூக்கா, பொள்ளாச்சி.

3.மாசிலாமணி, க/பெ. சின்னதுரை, வயது 55, வசிப்பிட முகவரி கம்பாலபட்டி கிராமம், ஆனைமலை தாலூக்கா, பொள்ளாச்சி.

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடானது பொள்ளாச்சி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.492/2013 வழக்கில் 10.12.2024-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேற்படி அசல் வழக்கில் கண்ட 1 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**விசாரணை நீதிமன்ற அசல் வழக்கு எண். 492/2013**

சண்முகவேல் ... வாதி

/ எதிர் /

1. ராஜம்மாள்
2. நடராஜ்
3. மாசிலாமணி ... பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடானது பொள்ளாச்சி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.492/2013 வழக்கில் 10.12.2024ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேற்படி அசல் வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள் 11.03.2025

இம்மனுவிற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டம் பிரிவு 37(2) மற்றும் உடன் இணைந்த பிரிவு 52ன் கீழ் முத்திரை கட்டணம் ரூ.151/- செலுத்தப்பட்டுள்ளது.

**<u>மேல்முறையீட்டு மதிப்பு விபரம்</u>**

| | | |
|---|---|---|
| நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்கான மதிப்பு | ரூ.2,000/- | |
| நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 27(c)ன் கீழ் செலுத்தப்பட்டுள்ளது. | | ரூ.151/- |
| மேல்முறையீட்டு மதிப்பு | ரூ.2,000/- | |
| நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 52ன் கீழ் செலுத்தப்பட்டுள்ளது. | | ரூ.151/- |

இம்மேல்முறையீட்டு வழக்கானது கடந்த 18.04.2026ம் தேதியன்று இறுதியாக இந்நீதிமன்றம் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.N.D.சம்பத்குமார், எம்.எல்., எம்.பி.ஏ., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.S.P.காமாட்சிகுமார், பி.ஏ., பி.எல்., அவர்கள்

முன்னிலையாகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாகப்பட்டுள்ள நிலையிலும், பின்னிட்டு, இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இந்நீதிமன்றம் இன்று வழங்கும்

**இறுதி உத்தரவு**

1) இந்த மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

2) இவ்வழக்கின் செலவுத் தொகைகளை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

**செலவுத்தொகை பட்டியல்**

(இருதரப்பிலும் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

## DESCRIPTION OF PROPERTY

**SCHEDULE - A :-**

திருப்பூர் பதிவு மாவட்டம், ஆனைமலை சார்பதிவு வட்டம், பொள்ளாச்சி வட்டம், ஜல்லிபட்டி கிராமம், புலத்தில் க.ச.141 நெ.காலை பு.ஹெக்டர் 1.87.0 க்கு பு.ஏ.4.62, க.ச.141/3 நெ. காலை பு.ஹெக் 0.84.0 க்கு பு.ஏ. 2.08 க்குத் தீர்வை ரூ.2.32 மேற்படி பூமி தனிக்காலையாகும். பின்னும் மேற்படி கிராமம் புலத்தில் க.ச.141/1 நெ.காலை பு.ஹெக் 0.61.0 க்கு பு.ஏ.1.50 க்குத் தீர்வை ரூ.1.69 இதில்,

| | |
|---|---|
| ராஜம்மாள் பங்கு பூமிக்கும் | – தெற்கு |
| நாச்சிமுத்துக் கவுண்டர் பங்கு பூமிக்கும் | – வடக்கு |
| க.ச.140 நெ. காலைக்கும் | – கிழக்கு |
| க.ச.141/3 நெ. காலையில் இந்தப்பத்திரப்படி கிரயம் கொடுக்கும் பூமிக்கும் | – மேற்கு |

இதன் மத்தியில் பு.ஏ.0.24 க்குத் தீர்வை ரூ.0.27. ஆக இரண்டு காலையில் மொத்தம் பு.ஏ.2.32 க்குத் தீர்வை ரூ.2.59 இரண்டு ஏக்கர் முப்பத்தி இரண்டு சென்ட் பூமி மட்டும்.

**SCHEDULE – B :-**

முன்பு பொள்ளாச்சி தாலூக்கா, தற்போது ஆனைமலை தாலூக்கா, ஆனைமலை சப்டிடு, ஜல்லிபட்டி கிராமம் தென்வடல் ரோட்டிலிருந்து மேற்கு முகமாக க.ச.141/1ன் வடகோட்டிலும், க.ச.140/1 தென்கோட்டிலும் சென்று வாதியின் சொத்துக்களை அடையும் சுமார் 10 அடி அகலமுள்ள வண்டித்தடம்.

இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29–ம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

**ஒப்பம்/–(M.மணிகண்டன்)**
**சார்பு நீதிபதி, பொள்ளாச்சி.**

**நகல்**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி.

**இறுதி உத்தரவு**

AS No.12/2025
நாள்: 29.04.2026